**இந்த பாலிசியில், முதலீட்டு இலாகாவில் முதலீட்டு அபாயம் பாலிசிதாரரால் ஏற்கப்படுகிறது.**

''யூனிட் லிங்க்டு இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள் ஒப்பந்தத்தின் முதல் ஐந்து ஆண்டுகளுக்கு எந்த ரொக்கமாக்கலையும் வழங்குவதில்லை. பாலிசிதாரர்கள் ஐந்தாவது ஆண்டின் இறுதிவரை யூனிட் லிங்க்டு இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களில் முதலீடு செய்த பணத்தை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒப்புவிப்பு செய்ய அல்லது திரும்பப் பெற்றுக்கொள்ள முடியாது.''

## எஸ்பிஐ லைஃப் - ஸ்மார்ட் இன்ஷ்யூர்வெல்த் ப்ளஸ் ஏன்?

நீங்கள் வாழ்க்கையில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கையில், உங்களுடைய கனவுகளும் உங்களுடன் சேர்ந்து வளர்ந்து கொண்டிருக்கிறது. உங்கள் குடும்பத்தின் பொருளாதார எதிர்காலத்தை காத்து உங்கள் ஆசைகளையும் நிறைவேற்றிக் கொள்ளுங்கள். எஸ்பிஐ லைஃப் - ஸ்மார்ட் இன்ஷ்யூர்வெல்த் ப்ளஸ் என்பது ஒரு யூலிப் திட்டம், இது உங்கள் அன்புக்கினியவர்களை பாதுகாத்திடும் வேளையில் உங்கள் சொத்தையும் உருவாக்குகிறது. எஸ்பிஐ லைஃப் - ஸ்மார்ட் இன்ஷ்யூர்வெல்த் ப்ளஸ் ஒரு தனிப்பட்ட, யூனிட்-லிங்க்டு, நான்-பார்டிசிபேட்டிங், லைஃப் இன்ஷ்யூரன்ஸ் திட்டம். இது உங்கள் கனவுகளை மெய்ப்படச் செய்வதற்கு ஒழுங்கமைந்த சேமிப்புகளின் சிறப்பம்சம் மற்றும் **முறையான மாதாந்திர வித்ட்ராவல்கள்#** பெற்று பயனடைவதற்கு இணக்கத்தன்மையுடன் உங்களுக்கு ஆயுள் காப்பீட்டு கவரேஜ் வழங்குகிறது.

## முக்கிய சிறப்பம்சங்கள்

- **ஈஸி மன்த்லி இன்ஷ்யூரன்ஸ் :** தேர்ந்தெடுக்கப்பட்ட காலவரைக்கு மாதாந்திர பிரீமியம் தொகையை செலுத்துவதன் மூலம், ஒரு முதலீட்டு ஒழுங்குமுறையை மனதில் பதிய வைத்தல்.
- **மூன்று முதலீட்டு உத்திகளின் விருப்பத்தேர்வு :** ட்ரிகர் ஸ்ட்ரேடஜி, ஆட்டோ அசெட் அலோகேஷன் ஸ்ட்ரேடஜி, மற்றும் ஸ்மார்ட் சாய்ஸ் ஸ்ட்ரேடஜி
- **ஸ்மார்ட் சாய்ஸ் ஸ்ட்ரேடஜி கீழ் முதலீட்டு இணக்கத்தன்மை :** இதன் மூலம் உங்கள் முதலீட்டை நிர்வகிக்கலாம்
  - உங்கள் இடர் தாங்கு திறனுக்கு ஏற்ப 9 ஃபண்ட் விருப்பத்தேர்வுகளின் தேர்வு
  - பாலிசி காலவரை முழுவதும் வரம்பற்ற இலவச சுவிட்சஸ் மற்றும் பிரீமியம் மறு திசைமாற்றங்கள்&
- பாலிசி முதிர்வடைந்த **நிலையில் ரிடர்ன் ஆஃப் மார்டாலிடி சார்ஜஸ்** (ROMC)
- **லாயல்டி கூடுதல்கள்#** மூலம் உங்கள் ஃபண்ட் மதிப்பு அதிகரிப்பு
- **பாதுகாப்பு :** உங்களுக்கு மற்றும் துரதிர்ஷ்டவசமாக இறந்துவிடும் நிலையில் உங்கள் அன்புக்கினியவர்களுக்கான நிதிசார் பாதுகாப்பு
- **முறையான மாதாந்திர வித்ட்ராவல்# :** மாதாந்திர பணப் பட்டுவாடா மூலம் உங்களுடைய வழக்கமான செலவினங்களை எதிர்கொள்ளல்
- **வரிச் சலுகை** :** நீங்கள் இந்தியாவில் பொருந்தும் வருமான வரிச் சட்டங்கள் படி வருமான வரி சலுகைகள்/விலக்கல்களுக்கு தகுதி உடையவர்
- **பணப்புழக்கம் :** 5வது பாலிசி ஆண்டிலிருந்து பகுதி திரும்பப் பெறுதல் கிடைக்கிறது


#11வது பாலிசி ஆண்டு முதல். செலுத்த வேண்டிய பிரீமியங்கள் யாவும் செலுத்தப்பட்டு மற்றும் பாலிசி நடைமுறையில் இருப்பின்
&இரண்டாவது பாலிசி மாதம் முதல்.
**வருமான வரிச் சட்டங்கள் படி வருமான வரிச் சலுகைகள் மற்றும் அவ்வப்போது வரிச் சட்டங்களில் செய்யப்படும் மாற்றத்திற்கு உட்பட்டவையாகும். தயவுசெய்து விவரங்களுக்கு உங்கள் வரி ஆலோசகரிடம் கலந்தாலோசிக்கவும்.

## நன்மைகளின் எளிய விளக்கம்

அஜய் 30 வயது நிரம்பியவர், அடிப்படை காப்பீட்டுத்தொகை ₹12 லட்சத்திற்காக எஸ்பிஐ லைஃப் - ஸ்மார்ட் இன்ஷ்யூர்வெல்த் ப்ளஸ் பாலிசியை 25 ஆண்டுகள் பணச்செலுத்த காலவரைக்காக பெற்றுக்கொண்டார். அவர் மாதம் ஒன்றுக்கு ₹10,000 பிரீமியம் செலுத்துகிறார். அவர் ஸ்மார்ட் சாய்ஸ் ஸ்ட்ரேடஜி கீழ் 100% ஈக்விட்டி ஃபண்டிற்காக தேர்வு செய்கிறார். இந்த திட்டத்தின் கீழ் அவர் எவ்வாறு பயனடைகிறார் என்று பார்ப்போம்.

1. **முதிர்வுநிலையில் பலன் (ஒட்டுமொத்த தொகை)**


   முதிர்வடைந்த தேதி அன்று, அஜய் என்பவரின் முதிர்வுநிலை பலன், கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப் படி ஊகிக்கப்பட்ட முதலீட்டு லாபங்களின் அடிப்படைல் அமைந்தது:




| ஊகிக்கப்பட்ட முதலீட்டு லாபம் | ரிடர்ன் ஆஃப் மார்டாலிடி சார்ஜ் (₹) | மொத்தம் முதிர்வுநிலை பலன் (₹) (ஃபண்ட் மதிப்பு^) (25வது ஆண்டின் முடிவில்) |
|---|---|---|
| 8% | ₹ 6,351 | ₹ 68,76,034 |
| 4% | ₹ 7,218 | ₹ 39,50,030 |

## 2. இறப்புப் பலன்

அஜய் என்பவரின் இறப்பு துரதிர்ஷ்டவசமாக 18வது பாலிசி ஆண்டின் இறுதியில் நிகழ்ந்துவிடும் பட்சம், இறப்புப் பலன், கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப் படி ஊகிக்கப்பட்ட முதலீட்டு லாபங்களின் அடிப்படையில் அமையும்




| ஊகிக்கப்பட்ட முதலீட்டு லாபம் | இறப்புப் பலன்^ (18வது பாலிசி ஆண்டின் இறுதியில்) |
|---|---|
| 8% | ₹ 37,52,204 |
| 4% | ₹ 25,59,721 |

^ஃபண்ட் மதிப்பு புள்ளிவிவரங்கள் விளக்க நோக்கங்களுக்காகவும் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்காகவும் ஆகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஊகிக்கப்பட்டுள்ள விகிதங்கள் ஆண்டு ஒன்றுக்கு முறையே @4% மற்றும் @8% வீதம், விளக்கம் கொடுப்பதற்காக மட்டுமே, இது கட்டணங்களின் அடிப்படையில், எல்லா கட்டணங்களையும் கணக்கில் கொண்டு காட்டப்பட்டுள்ளது. இவை உத்தரவாதமானவை அல்ல மற்றும் இவை லாபத்தின் உச்ச அல்லது கீழ் வரம்பு அல்ல. யூனிட் லிங்க்டு லைஃப் இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள் சந்தை இடர்பாடுகளுக்கு உட்பட்டவை. இந்த ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படும் பற்பல நிதிகள் மற்றும் நிதிகளின் பெயர்கள் எந்த வகையிலும் இந்த திட்டங்களின் தரத்தை, அவற்றின் எதிர்கால வளர்ச்சி மற்றும் லாபங்களை குறிப்பதாகாது. மேலும் தகவலுக்கு உங்கள் பாலிசியின் சிறப்பு நன்மை விளக்கத்தை கோரவும்.

## திட்ட விவரங்கள்

| | | |
|---|---|---|
| **நுழைகையில் வயது$** | **குறைந்தபட்சம் :** 0 ஆண்டு (30 நாட்கள்) | **அதிகபட்சம் :** 55 ஆண்டுகள் |
| **முதிர்வு நிலையில் வயது$** | **குறைந்தபட்சம் :** 18 ஆண்டுகள் | **அதிகபட்சம் :** 65 ஆண்டுகள் |
| **பாலிசி காலவரை$$** | 10, 15, 20 மற்றும் 25 ஆண்டுகள் | |
| **பிரீமியம் செலுத்தும் காலவரை** | பாலிசி காலவரை போன்றதே | |
| **பிரீமியம் தொகை (₹100-ன் மடங்குகளில்)** | **குறைந்தபட்சம் :** ₹4,000 மாதம் ஒன்றுக்கு | **அதிகபட்சம் :** வரம்பு இல்லை, குழுவின் ஒப்புதல் வழங்கப்பட்ட காப்புறுதி விண்ணப்ப கணிப்புக்கு உட்பட்டது |
| **பிரீமியம் வகைகள்** | மாதாந்திரம் | |
| **அடிப்படை காப்பீட்டுத் தொகை** | 10 x வருடாந்திர பிரீமியம்++, அதிகபட்சம் அடிப்படை காப்பீட்டுத்தொகை குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்ட பாலிசி காப்புறுதி விண்ணப்பம் கணிப்புப்படி ஆகும் | |

$அனைத்து குறிப்பாதாரங்களும் கடந்த பிறந்தநாள் படி வயது ஆகும்.

$$வயதுக்கு வராதவர் என்னும் நிலையில், தோராயமாக தேர்ந்தெடுக்கும் பாலிசி காலவரை முதிர்வடையும் நிலையில் காப்பீட்டுதாரர் வயதுவந்த நிலையை அடைந்திருப்பவராக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். வயதுக்கு வராதவரின் வயது நுழைகையில் 8 ஆண்டுகளுக்கு கீழ் இருந்தால், 2 பாலிசி ஆண்டு நிறைவுற்ற பிறகே இடர்காப்பு தொடங்குகிறது. நுழைகையில் வயது 8 அல்லது மேல் எனின், இடர்காப்பு உடனடியாக தொடங்குகிறது.

++வருடாந்திரமாக்கப்பட்ட பிரீமியம் என்பது ஓர் ஆண்டில் பொருந்தும் வரிகள் நீங்கலாக ஓர் ஆண்டில் செலுத்தத்தக்க பிரீமியம் தொகை.

## ரிபேட்ஸ் அளிக்கத் தடை

**காப்பீட்டுச் சட்டம், 1938-ன் பிரிவு 41 அவ்வப்போது திருத்தி அமைக்கப்பட்டபடி, எடுத்துரைப்பது :**

a) இந்தியாவில் உயிர் அல்லது சொத்து சம்பந்தமான ஒரு புதிய காப்பீடு அல்லது காப்பீட்டைப் புதுப்பித்தல் அல்லது தொடரச் செய்வதை ஊக்குவிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக, ஒருவருக்குக் கொடுக்கப்படும் கமிஷனில் முழுமையாக அல்லது ஒரு பகுதியை பாலிசி மீது கட்டப்படும் பிரீமியத்தில் ஒரு தள்ளுபடியாக அளிக்கவும் அல்லது பெற்றுக்கொள்ளவும் மற்றும் வெளியிடப்பட்டுள்ள பாலிசி அம்சங்கள் அல்லது காப்பீட்டாளரின் அட்டவணையில் கொடுக்கப்பட்டிருக்கும் தள்ளுபடிகள் தவிர பாலிசி எடுக்க, புதுப்பிக்க அல்லது தொடர ஊக்குவிக்கும் முறையில் எந்த தள்ளுபடியும் வழங்க அல்லது ஏற்றுக்கொள்ள அனுமதி இல்லை.

b) இந்த பிரிவின் விதிகளின் கீழ் நிறைவேற்றுவதில் எவரும் தவறு செய்திருப்பின் அபராதத்திற்கு உரியவர் ஆவார், அது பத்து லட்சம் ரூபாய் வரை இருக்கப்பெறலாம்.

**Toll-free No.:** 1800 267 9090 | SMS **'LIBERATE'** to 56161 |**Email:** info@sbilife.co.in | **Web:** www.sbilife.co.in
(Between 9.00 am & 9.00 pm)

எஸ்பிஐ லைஃப் - ஸ்மார்ட் இன்ஷ்யூர்வெல்த் ப்ளஸ் என்பது ஒரு தனிப்பட்ட, யூனிட்-லிங்க்டு, நான்-பார்ட்டிசிபேட்டிங், லைஃப் இன்ஷ்யூரன்ஸ் திட்டம்.

**போலியான தொலைபேசி அழைப்புகள் மற்றும் போலியான/மோசடியான சலுகைகள் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்.**
காப்பீடு பாலிசிகள், போனஸ் அறிவிப்பு அல்லது பிரீமியங்கள் முதலீடு போன்ற நடவடிக்கைகளில் IRDAI ஈடுபடுவதில்லை. இது போன்ற தொலைபேசி அழைப்புகளைப் பெறும் பொதுமக்கள் காவல்துறையிடம் புகார் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதல் 5 பாலிசி வருடக் காலத்தில் காப்புறுதி ஒப்புவிப்பு கோரிக்கை செய்யப்பட்டால், 6-வது பாலிசி வருடத்தின் முதல் வேலை நாளில் ஃபண்ட் மதிப்புத் தொகை வழங்கப்படும். 5 பாலிசி வருடங்கள் கழிந்த பிறகு காப்புறுதி விடுப்பு செய்யப்படும் பட்சத்தில், ஃபண்ட் மதிப்புத் தொகை உடனடியாக வழங்கப்பட்டுவிடும். 'பிரீமியம் ஒதுக்கீடு கட்டணங்கள்', 'ஃபண்ட் நிர்வாகக் கட்டணங்கள்', முதலானவை போன்ற பற்பல கட்டணங்கள் கழித்துக் கொள்ளப்படும். கட்டணங்களின் முழுமையான பட்டியல் மற்றும் அவற்றின் செயல்பாடுகளுக்காக, தயவுசெய்து விற்பனைச் சிற்றேட்டைப் பார்க்கவும். யூனிட் லிங்க்டு லைஃப் இன்ஷ்யூரன்ஸ் தயாரிப்புகள் மரபுரீதியான இன்ஷ்யூரன்ஸ் தயாரிப்புகளிலிருந்து வேறுபட்டவையாகும் மற்றும் சந்தை ஆபத்துக்கு உட்பட்டவையாகும். யூனிட் லிங்க்டு ஆயுள் காப்பீட்டு பாலிசிகளில் செலுத்தும் பிரீமியம் மூலதன சந்தைகளுடன் தொடர்புடைய தலீட்டு ஆபத்துகளுக்கு உட்பட்டவையாகும் மற்றும் நதியின் செயலாற்றல் மற்றும் மூலதன சந்தையை இயக்கும் காரணிகள் அடிப்படையில் யூனிட்களின் NAVகள் ஏறவோ அல்லது இறங்கவோ செய்யும் மற்றும் காப்பீட்டுதாரரே அவருடைய முடிவுகளுக்கு பொறுப்பாவார். எஸ்பிஐ லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்பது காப்பீட்டு நிறுவனத்தின் பெயர் மட்டுமே யாகும் மற்றும் எஸ்பிஐ லைஃப் - ஸ்மார்ட் இன்ஷ்யூர்வெல்த் ப்ளஸ் என்பது யூனிட் லிங்க்டு லைஃப் இன்ஷ்யூரன்ஸ் ஒப்பந்தத்தின் பெயர் ஆகும் மற்றும் ஒப்பந்தத்தின் தரம், அதன் எதிர்கால வளர்ச்சி அல்லது லாபங்களை எந்தவகையிலும் குறிப்பதாகாது. தயவு செய்து உங்களுடைய காப்பீட்டு ஆலோசகர் அல்லது இடையீட்டாளர் அல்லது காப்பீட்டாளரின் பாலிசி ஆவணத்திலிருந்து தொடர்புடைய ஆபத்துக்கள் மற்றும் பொருந்தக் கூடிய கட்டணங்கள் பற்றி அறிந்து கொள்ளவும். இந்த ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்படும் பற்பல நிதிகள், நிதிகளின் பெயர்கள் ஆகும் மற்றும் எந்த வகையிலும் இந்த திட்டங்களின் தரத்தை, அவற்றின் எதிர்கால வளர்ச்சி மற்றும் லாபங்களை குறிப்பதாகாது. ஃபண்ட் விருப்பத்தேர்வுகளின் கடந்தகால செயலாற்றல் எதிர்கால செயலாற்றலை சுட்டிக்காட்டுவதாகாது. இந்த பாலிசியின் கீழ் அளிக்கத்தக்க அனைத்து பலன்களும் வரிச் சட்டங்களுக்கு மற்றும் அவ்வப்போது நிலவும் இதர வரிச் சட்டங்களுக்கு உட்பட்டவை, தயவுசெய்து விவரங்களுக்கு உங்கள் வரி ஆலோசகரிடம் கலந்தாலோசிக்கவும். இடர் காரணிகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து மேலும் விவரங்களுக்கு தயவுசெய்து விற்பனையை முடிக்கும் முன்பாக விற்பனைச் சிற்றேட்டை கவனமாகப் படிக்கவும். இங்கே காட்டப்பட்டிருக்கும் வர்த்தகச் சின்னம் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியாவிற்குச் சொந்தமானது, எஸ்பிஐ லைஃப் உரிமம் பெற்று அதைப் பயன்படுத்துகிறது. எஸ்பிஐ லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்., பதிவு மற்றும் கார்ப்பொரேட் அலுவலகம் : 'நடராஜ்', எம். வி. ரோடு, வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் ஹைவே ஜங்ஷன், அந்தேரி (கிழக்கு), மும்பை-400 069. **IRDAI பதிவு எண் 111** | CIN : L99999MH2000PLC129113.

NW/2J/ver1/01/22/SP/TAM